**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2020**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் <u>ஒரு சொல் / தொடரில்</u> விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10 x 1 = 10)**

1. ஒலிக்கின்ற கடல் இறைவனை எவ்வாறு வாழ்த்தும்?
2. சிறந்த அறங்களில் முதன்மையான ஒன்றினைக் கூறுக.
3. காவிரியாறு தோன்றும் மலை எது?
4. மன்னுதல் என்பதன் பொருள் யாது?
5. சிலப்பதிகாரம் எத்தனைக் காண்டங்களைக் கொண்டுள்ளது?
6. திருக்குறளுக்கு வேறு பெயர் யாது?
7. வடக்கிலிருந்து வீசும் காற்றின் பெயர் என்ன?
8. திணை என்ற சொல்லின் பொருள் யாது?
9. 'வலவன் ஏவா வான ஊர்தி' என்ற தொடர் எதனை எடுத்துக்காட்டுகிறது?
10. பாக்கள் எத்தனை வகைப்படும்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் <u>பத்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>மூன்று வரிகளில்</u> விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. சாலை இளந்திரையன் யாரை வழிகாட்டியாகக் கொண்டார்?
2. தமிழரின் அறிவியல் திறத்தைப் புலப்படுத்துவது எது?
3. வெ. இராமலிங்கனார் இயற்றிய வேறு நூல்கள் யாவை?
4. கண், கால் இவற்றுக்கு வனப்பாவன யாவை?
5. மாமழையை ஏன் போற்ற வேண்டும்?
6. தக்கார், தகவிலர் என்பது எதனால் காணப்படும்?
7. கள்ளி, கடல் இவற்றுள் பிறப்பன யாவை?
8. மணி போன்ற மாணவர்களை எவ்வாறு உருவாக்க வேண்டும்?

9. தன்னைப் பணிந்தவர்களுக்கு 'மூன்றாம் நந்திவர்மன்' எதைக் கொடுத்தான்?
10. பாரதியார், பாரதிதாசன் பாடல்களைப் பற்றிக் கூறுக.
11. ஏதேனும் மூன்று அணிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
12. நாட்டுப்புறப் பாடல்கள் வெளிப்படுத்துவது யாது?
13. மூன்றாம் வேற்றுமை உருபுகள் எவை?
14. திசைப்பெயர் புணர்ச்சி என்றால் என்ன?
15. மரபு என்றால் என்ன?

**பகுதி – இ**

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. காவிரியாற்றின் பிறப்பு பற்றி எழுதுக.
2. தமிழ் மொழியின் பதினாறு பண்புகள் எவை என பாவாணர் கூறுகிறார்?
3. பாரதியாரின் சுதந்திர தேவி பாடலின் பொருளை எழுதுக.
4. "மண்ணிடை இயேசு மறுபடி வருவார்" – என்ற பாடல் வழி கண்ணதாசன் கூறியுள்ளவற்றை விளக்குக.
5. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. வேற்றுமை என்றால் என்ன? வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. அறுவகைப் பெயர்களைக் கூறி, எடுத்துக்காட்டு தருக.
8. பறவை – விலங்குகளின் உறைவிட மரபுகள் எவையேனும் ஆறு எழுதுக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

*Aswer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. வான ஊர்தி பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
2. புகழ் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைக் கூறுக.
3. பகுபத உறுப்புகளை விளக்குக.

**பகுதி – உ**

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. "நடப்பதெல்லாம் நன்மைக்கே" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.
2. தற்குறிப்பேற்ற அணி, வஞ்சப்புகழ்ச்சி அணி, பிரிது மொழிதல் அணி ஆகியவற்றை விளக்கி, எடுத்துக்காட்டுகள் தருக.

.....